நாள்.13.02.2024

**அசல் வழக்கு எண். 26/2022**

வா.சா.1- 1 முதல் 6, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது இடத்தில் இருந்து கீழ்புறத்திலுள்ள தார் சாலை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 150 அடி தூரம் இருக்கும். எனது இடத்திலிருந்து கீழ்புறம் உள்ள அதிராம்பட்டிணம் to மன்னார்குடி செல்லும் சாலை 150 அடி தூரம் இல்லை என்றும் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு கீழ்புறம் யாருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் ஆவுடையப்பன். ஆவுடையப்பன் இடத்திற்கு அடுத்த கீழ்புறம் அதிராம்பட்டிணம் to மன்னார்குடி சாலை உள்ளது. நான் சொல்வதுபோல் ஆவுடையப்பன் அடுத்த கீழ்புறம் அதிராம்பட்டிணம் to மன்னார்குடி சாலை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து ஒரு ஆணையரை நியமனம் செய்து பார்த்தால் அது பற்றிய விவரம் தெரிய வரும். நீதிமன்ற ஆணையரை நியமிக்க எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. எனது இடத்திற்கு அடுத்த வடபுறம் பஞ்சாயத்து சாலை உள்ளது. நான் சொல்வதுபோல் வடபுறம் பஞ்சாயத்து சாலை இல்லை என்றும் பாதை தான் உள்ள து சொன்னால் சரியல்ல. எனது இடத்திற்கு வடபுறம் உள்ள சாலையில் தார் சாலையா என்றால் ஆமாம். எனது இடத்திற்கு வடபுறம் உள்ள சாலையானது தார் சாலை இல்லை என்றும், அது ரோடு கிடையாது என்றும், அது பாதை தான் என்று சொன்னால் சரியல்ல. எனது இடத்திற்கு வடபுறம் உள்ள சாலையானது 14 அடி அகலம் உள்ளது. நான் சொல்வதுபோல் வடபுறம் உள்ள சாலையானது 14 அடி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்திற்கு வடபுறம் உள்ள சாலைக்கும் வடபுறம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வைத்தியலிங்கம், மாரிமுத்து மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு சொந்தமான இடம் உள்ளது. வைத்தியலிங்கம், மாரிமுத்து மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு சொந்தமான இடத்தின் கீழ்புறத்தில் யாருடைய இடம் உள்ளது என்றால் வைத்தியலிங்கம், மாரிமுத்து மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு சொந்தமான இடம் கீழ்புறம் தார்ரோடு வரை உள்ளது. வைத்தியலிங்கம், மாரிமுத்து மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களின் இடத்திற்கு கீழ்புறம் இருந்து தார் சாலை வரை எவ்வளவு வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. 3 வீடுகளில் யார் யார் குடியிருந்து

வருகிறார்கள் என்றால் மாரிமுத்து, ராஜேந்திரன், சின்னக்கண்னு ஆகியோர்கள் தனித்தனியாக ஒவ்வொரு வீட்டிலும் குடியிருந்து வருகிறார்கள். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்திற்கு வடபுறம் உள்ள ரோட்டிற்கும் வடபுறம் உள்ள கீழமேல் செல்லும் மழைநீர் செல்வதற்காக காண் வேண்டும் என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சொந்தமான இடம் மற்றும் மேல்புறத்திலிருந்து வரும் தண்ணீர் வடிவதற்காக அந்த காணை கேட்கிறேன். ரோட்டிற்கு தென்புறம் தான் எனக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான். என்னுடைய இடத்திலிருந்து வடபுறம் உள்ள ரோடு வழியாக சிமெண்ட் குழாய் உள்ளதா என்றால் இல்லை, ரோட்டை வெட்டி தான் தண்ணீர் வடிக்க வேண்டும். நான் சொல்வதுபோல் அதுபோன்று வடிகால் ஏதும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது இடத்திற்கு கீழ்புறம் ஆவுடையப்பன் இடம் உள்ளது, அதற்கு கீழ்புறம் அதிராம்பட்டிணம் to மன்னார்குடி தார் சாலை உள்ளது. எனது இடத்திற்கும், வடபுறம் உள்ள ரோட்டிற்கும் தென்புறம் கிழக்குநோக்கி வடிகால் வாய்க்கால் உள்ளதா என்றால் இல்லை. எனது இடத்திற்கும், வடபுறம் உள்ள ரோட்டிற்கும் தென்புறத்தில் உள்ள வடிகால் வாய்க்கால் மூலமாக மேற்கே உள்ள சீவாடி ஏரியில் செல்கிறது என்றால் சரியல்ல. நான் தண்ணீர் செல்லும் வாய்க்காலின் அமைப்பை மாற்றி பொய்யாக ஒரு வழக்கு தாக்கல் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனது இடத்திற்கும், வடபுறம் உள்ள ரோட்டிற்கும் வடபுறம் கிழமேலாக வடிகால் ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜேந்திரன், மாரிமுத்து, சின்னக்கண்னு ஆகியோர்களை இடையூறு செய்ய வேண்டி , இல்லாத வடிகால் வாய்க்காலை இருப்பதாக காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சென்றால் அதிராம்பட்டிணம் to மன்னார்குடி தார்சாலை தான் உள்ளது என்றால் காண் தான் இருக்கிறது. எனது சொத்திற்கு மேல்புறம் சீவாடி ஏரி உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு கீழ்புறம் உள்ள அதிராம்பட்டிணம் to மன்னார்குடி சாலை பக்கத்தில் ஏரியோ, குளமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையை மறைத்தும், இல்லாத வடிகால் வாய்க்காலை இருப்பதாக உண்மைக்கு புறம்பாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு படி எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.